Dinamalar 03.09.2025

## டாடா எலக்ட்ரானிக்ஸ் ஜெர்மன் நிறுவனம் கூட்டு

**புதுடில்லி, செப். 3–**

டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், ஜெர்மனியைச் சேர்ந்த செமிகண்டக்டர் பொருட்கள் தயாரிப்பாளரான, 'மெர்க் எலக்ட்ரானிக்ஸ்' நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.


டில்லியில் நடைபெற்று வரும் செமிகான் இந்தியா மாநாட்டில், மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

டாடா எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம், குஜராத்தின் தோலேரா பகுதியில் 91,000 கோடி ரூபாய் முதலீட்டில் செமிகண்டக்டர் உற்பத்தி ஆலை அமைத்து வருகிறது. இங்கு உற்பத்திக்கு தேவையான மிக தூய்மையான மின்னணு பொருட்கள், அதி நவீன எரிவாயு மற்றும் ரசாயன வினியோக முறைகளை, மெர்க் நிறுவனத்திடம் இருந்து பெற டாடா எலக்ட்ரானிக்ஸ் முடிவு செய்துள்ளது.

இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, உள்ளூரில் சேமிப்பு கிடங்கு வசதிகள் அமைப்பது, மூலப் பொருட்கள் வினியோக தொடர் மேம்பாடு, திறமையாளர்களை உருவாக்குவது, தொழில் முறைகள் மற்றும் தரநிலைகளை ஏற்படுத்துவது உள்ளிட்ட பணிகளும் மேற்கொள்ளப்பட உள்ளது.

## செமிகண்டக்டர் இயக்கத்தின் அடுத்த கட்டத்தில் கவனம்: பிரதமர்

**புதுடில்லி, செப். 3–**



- கடந்த 2021ல் 76,000 கோடி ரூபாய் ஒதுக்கீட்டில் துவங்கப்பட்ட இந்திய செமிகண்டக்டர் மிஷன் முதல் கட்டத்தில், 10 சிப் ஆலைகளுக்கு அனுமதி
- டாடா பி.எஸ்.எம்.சி., மைக்ரான் டெக்னாலஜி, முருகப்பா குழுமத்தின் சி.ஜி., பவர், கேயின்ஸ் செமிகான் மற்றும் எச்.சி.எல்., பாக்ஸ்கான் நிறுவனங்களின் சிப் தயாரிப்பு திட்டங்கள்
- அடுத்த கட்டத்தில், 1.30 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு மதிப்புள்ள ஊக்கத்தொகை வழங்கப்படலாம் என எதிர்பார்ப்பு.

இந்தியாவில் சிப் தயாரிப்பை ஊக்குவிக்க, செமிகண்டக்டர் இயக்கத்தின் அடுத்த கட்டத்தை அரசு செயல்படுத்தி வருவதாக பிரதமர் மோடி அறிவித்துள்ளார்.

டில்லியில் 'செமிகான் இந்தியா – 2025' மாநாட்டை துவக்கி வைத்து, பிரதமர் மோடி தெரிவித்ததாவது:

இந்தியா மீது உலகம் நம்பிக்கையுடன் உள்ளது. இந்தியாவுடன் இணைந்து சிப் தயாரிப்பில் ஈடுபட உலக நாடுகள் தயாராக உள்ளன. அடுத்த தலைமுறைக்கான சீர்திருத்தங்களை மேற்கொள்வதில் கவனம் செலுத்தி வருகிறோம். இந்திய சிப் தயாரிப்பு இலக்குக்கான அடுத்த கட்டத்தை செயல்படுத்தி வருகிறோம்.

நம் முயற்சி, வெறும் சிப் தயாரிப்புடன் நின்றுவிடாமல், அதற்கான சூழலை கட்டமைப்பதன் வாயிலாக உலகளவில் போட்டி போடுவதுடன், தன்னிறைவு அடைய செய்யும். இந்தியா பின்தங்கிய நிலையில் இருந்து, தற்போது முழுமையான சிப் தயாரிப்பு நாடாக மாறி உள்ளது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் மிகச்சிறிய சிப், உலகளவில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் நாள் வெகுதொலைவில் இல்லை. நம் பயணம் தாமதமாக துவங்கி இருக்கலாம். ஆனால், எவராலும் தற்போது நம்மை நிறுத்த முடியாது.

முதல் காலாண்டு வளர்ச்சி, அனைவரது எதிர்பார்ப்பையும் விஞ்சியுள்ளது. மறுபுறம், பொருளாதார சுயநலவாதிகள் காரணமாக சவால்கள் அதிகரித்து, அழுத்தத்தை இந்தியா எதிர்கொண்டு வருகிறது.

இதையெல்லாம் தாண்டி, தயாரிப்பு, விவசாய துறையில் வளர்ச்சியை பதிவு செய்து வருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

Dinamalar 03.09.2025

# ஏ.ஐ. ஒரு போதும் மனிதர்களுக்கு மாற்று அல்ல

## எஸ்.எஸ்.வி.எம். நிர்வாக அறங்காவலர் பேச்சு

**கோவை, செப். 3–**

கோவை எஸ்.எஸ்.வி.எம். கல்வி நிறுவனங்கள் சார்பில், 'உருமாறும் இந்தியா–2025' மூன்று நாள் மாநாடு நடந்து வருகிறது.

2வது நாளான நேற்று, எஸ்.எஸ்.வி.எம். கல்வி நிறுவனங்களின் இயக்குனர் ஸ்ரீஷா பேசியதாவது:

வேகமாக வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவு (ஏ.ஐ.) தொழில்நுட்பத்தை, ஒவ்வொரு துறையினரும் தங்களுக்கேற்ப பயன்படுத்துகின்றனர். ஏ.ஐ. தொழில்நுட்பத்தை வளர்ச்சிக்காக, பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஒரு மாணவராக, கல்வி அசைன்மென்டுக்கு பயன்படுத்தலாம். உங்களின் திறன், தகுதி, கண்ணோட்டத்தை செறிவூட்டவே பயன்படுத்த வேண்டும். அதை மட்டுமே சார்ந்திருப்பவராக மாறிவிடக்கூடாது.

ஆசிரியர்கள் இத்தொழில்நுட்பத்தை உரையாடல் திறனை மேம்படுத்தவும், தனித்தன்மையை வெளிக்கொணரவும், யோசனையை மெருகேற்றவும் பயன்படுத்தலாம்.

எதிர்காலம் மனிதர்களா, செயற்கை நுண்ணறிவா என்ற போட்டிக்களம் அல்ல. செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துபவர்கள், பயன்படுத்தாதவர்கள் என்பதற்கான போட்டிக்களம்.

ஏ.ஐ. தொழில்நுட்பத்தை, மானுட சமுதாயத்துக்கு எப்படி பயன்படுத்த வேண்டும் என்பதே மெய்யறிவு. நாம் எப்படி நாமாக இருப்பது என்பதை, கற்றுக்கொள்வதே முக்கியம்.

இவ்வாறு, அவர் பேசினார்.

கங்கா மருத்துவமனை பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைத் துறை தலைவர் ராஜசபாபதி, ஏ.ஐ. கோட்பாட்டு நெறியாளர் மற்றும் ஆய்வாளர் ஜிபு இலியாஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினர். அவர்களுடன் மாணவர்கள் விவாதித்தனர்.

மாணவ தொழில்முனைவோர் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, முதல் பரிசாக ரூ.75 ஆயிரம், 2ம், 3ம் பரிசாக முறையே ரூ.50 ஆயிரம், ரூ.25 ஆயிரம் மற்றும் விருதுகள் வழங்கப்பட்டன.

கல்வி நிறுவனங்களின் செயலர் மோகன்தாஸ், இயக்குனர் நித்தின் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாநாடு இன்று நிறைவடைகிறது.




■ கோவை எஸ்.எஸ்.வி.எம். கல்வி நிறுவனங்கள் சார்பில், 'உருமாறும் இந்தியா' மாநாட்டில், இயக்குனர் ஸ்ரீஷா பேசினார். அருகில், கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் மணிமேகலை.



■ சரண் ஹெக்டே

### 'முதலீட்டு ஆலோசனைகளில் ஏ.ஐ. நம்பகமானது இல்லை'

ஒன் பர்சென்ட் கிளப் நிறுவனர் சரண் ஹெக்டே பேசுகையில், "சிறு வயதில் இருந்தே பணத்தை நிர்வகிக்க பழகுங்கள். முதலீட்டு ஆலோசனைகளில் ஏ.ஐ. தொழில்நுட்பம் இப்போதைக்கு நம்பகமானதல்ல. இரண்டு விதமான முதலீடுகள் உள்ளன. ஒன்று உங்கள் பணத்தை முதலீடு செய்வது. இரண்டாவது, உங்களின் ஓய்வு நேரத்தை முதலீடு செய்வது. உங்களின் நேரத்தை எதில் முதலீடு செய்கிறீர்கள் என்பதில் உங்களின் வெற்றி அடங்கியிருக்கிறது. உங்களுக்கும் மற்றவர்களுக்குமான அறிவுத் திறன் இடைவெளியே, உங்களது பணம் சம்பாதிக்கும் திறனை தீர்மானிக்கிறது," என்றார்.

### 'குரு – சிஷ்ய பந்தம் உருவாக்க முடியாது'

எஸ்.எஸ்.வி.எம். கல்வி நிறுவனங்களின் நிர்வாக அறங்காவலர் மணிமேகலை பேசுகையில், "ஏ.ஐ. ஒருபோதும் மனிதனுக்கு மாற்றாகி விட முடியாது. ஒரு ரோபோவால் ஆசிரியர்களை விட, அதிக தகவல்களைக் கூறி விட முடியும். குரு, சிஷ்ய பந்தத்தை, உணர்வுப்பூர்வ பிணைப்பை உருவாக்க முடியாது.ஏ.ஐ. தொழில்நுட்பத்தை உதவிகரமான ஒரு கருவியாக பயன்படுத்திக் கொள்ளலாம். துணி துவைத்தல், கிளீனிங் என, உங்களின் வேலைக்கு மாற்றாக, ஓர் இயந்திரம் வந்துவிடும். உங்களின் அறிவுத் திறனுக்கு மாற்றாக ஏ.ஐ. தொழில்நுட்பத்தால் வந்து விட முடியாது," என்றார்.